# Chezhumai

# செழுமை

# TIST India



T I S T Farmers Help Worldwide Problem

## The International Small Group & Tree Planting Program

TIST India: 19/8, Lake View Road, Kottur, Chennai 600 085, Tamil Nadu, India
Phone : +91 44 42188438 / Mobile: +91 9840299822 / Email: josephrexon@tist.org

## HELPLINE

For any information or help
Dial 9003020836 / 9003020839 / 9003020843

If you have any difficulty in TIST Program Dial 9840299822

Our landline: +91 44 42188438

Our email: josephrexon@tist.org

Our address: 19/8, Lake View Road, Kottur, Chennai 600085

## தொழில்முறை உதவி

எந்த தகவல் மற்றும் உதவிக்கு
டயல் பண்ணுங்கள் : 9003020836 / 9003020839 / 9003020843

உங்களுக்கு டி.ஐ.எஸ.டி. திட்டத்தில் ஏதாவது கஷ்டம் இருப்பின்
டயல் பண்ணுங்கள் : 9840299822

எமது நிலவழி இணைப்பு :
+91 4442188438

எமது மின்அஞ்சல் :
Josephrexon@tist.org

எமது விலாசம் :
19/8 ஏரிக்கரைச் சாலை கோட்டூர்,
சென்னை 600085

The wounds we have inflicted on the Earth can be healed ... But if it is to be done, it must be done now. Otherwise, it may never be done at all." - Plant Trees and save the Earth

நம்மால் பூமிக்கு ஏற்ப்பட்ட காாயங்களை குணமாக்கலாம், ஆனால் இதை செய்யவேண்டுமென்றால் இதுதான் சரியான நேரம் இல்லையெனில் செய்யவே இயலாது– மரங்களை வளர்த்து பூமியை காப்பாற்றுங்கள்

## Benefits of Vermiculture

The earthworms play a vital role in the entire process; in ploughing and fertilizing the soil and providing all the needed nutrition to the plants. The earthworms have contributed to improve the soil structure, soil fertility, promote soil aggregation, encourage favorable soil reactions and enrich the nutrient status of the soil and in the process promoting the plant growth and improving the quality of the produce. Earthworms churn the soil and make it porous. They improve the soil by helping it achieve proper air, water and solids in the required ratio for maximum plant growth. Earthworms improve the water infiltration rate. Its maze of tunnels increases the soil's ability to absorb water. Earthworms bring up minerals and make plant nutrients more available. Earthworms also neutralize soil pH. Analysis of earthworm castings or manure shows that the soil in the castings has neutral pH (7) regardless of whether the existing soil is above or below pH (7). Earthworms compost plant residues. Earthworms stimulate microbial population. Free-living nitrogen fixing bacteria are more numerous around the sides of the earthworm's burrows.

## வெர்மிகல்சரின் பயன்கள்

இந்த உரத்தில் முக்கிய பங்கு வகிப்பவை மண்புழுக்கள் நிலத்தை உழுதல் பயிர்களுக்கு தேவையான புரத சத்துக்களை அளித்து நிலத்தின் வளமையை அதிகரிப்பது இந்த உரத்தின் தன்மை, நிலத்தை வளமிக்கதாக மாற்றி பயிரிடும் பயிர்களையும் போஷாக்குடன் வளர செய்து நல்ல பலனை அளிக்க செய்வதில் பெரும்பங்கு ஆற்றுவது மண்புழுக்கள். மண்புழுக்கள் நிலத்தை குடைந்து உள்ளே சென்று நுண்ணிய துளைகளை அமைக்கிறது. இதனால் மண்ணின் வளம் பெருகி தேவையான அளவு காற்று, நீர் மற்றும் பயிர்கள் வளர தேவையான சத்து பொட்களையும் சரியான விகிதத்தில் பெற வழி வகுக்கிறது. மண்புழுக்கள் நீரின் ஊடுருவல் தன்மையை விருத்தி செய்கிறது. இந்த புழுக்கள் சுரங்கங்கள் போல் அமைத்து ஊடுருவதால் நிலத்திற்கு தேவையான நீரை உறிஞ்சும் தன்மையும் அதிகரிக்கிறது நிலத்திற்கு தேவையான தாது மற்றும் சத்து பொருட்களையும் கிடைக்க வழிவகுக்கிறது நிலத்தின் பிஎச் அளவையும் நடுநிலையிள் வைக்கிறது மண்புழு உரமானது ,நிலம் பிஎச் அளவில் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இருந்தாலும் இந்த உரம் பிஎச் (7) அளவை நடுநிலையிலேயே வைக்கிறது. இலை, தழை மற்றும் தாவரங்களின் சக்கைகளை மண்புழுக்கள் உரமாக மாற்றுகிறது. மண்புழுக்கள் நுண்கிருமிகளின் வளர்ச்சியை தூண்டுகிறது நைட்ரஜன் வாயுக்களை பெருக்கும் பாக்டீரியாக்கள், மண்புழுக்கள் நிலத்தில் ஏற்படுத்தும் பொந்துக்களின் பக்கங்களில் நிறைந்து காணப்படுகிறது.

## Sri Nataraja Small Group of Chetpet Center

The members of Sri Nataraj Small Group of Chetpet Center say that they are following all best practices of TIST in a good manner. After joining as small group in TIST, the members planted two different tree species type in one portion of their land to see whether tree species grows well in their land. They named that portion of land as Nataraja and invited the quantifiers to quantify their trees. In the quantification, they have 98 Sandalwood and 320 Teak trees. All the trees are growing well by the hard work of the members. The members say that immediately after planting trees, they started to do groundnut farming. They also say that for the trees to grow well, we need to take utmost care whiling watering and providing natural manure.

## சேத்பட் மையத்தை சேர்ந்த ஸ்ரீ நடராஜா சிறுகுழு

TIST - ன் சேத்பட் மையத்திள் உள்ள வேளாந்தாங்கல் கிராமத்தில் வசிக்கும் ஸ்ரீநடராஜா சிறுகுழுவின் உறுப்பினர்கள் கூறுகையில் இவர்கள் TIST ல் இணைந்து இத்திட்டத்தின் அடிப்படை செயல்முறைகளை முறையாக கடைபிடித்து வருகின்றனர். இவர்கள் சிறு குழுவாக இணைந்து அவர்களின் நிலங்களில் நீண்டகால மரங்கள் நன்கு வளர்கிறதா என்ற பார்க்க ஆர்வமுடன் முதலில் அவர்களின் ஒரு பகுதி நிலத்தில் இரண்டு வகையான மரங்களை நடவு செய்தனர். அந்த நிலப்பகுதிக்கு நடராஜா என்று பெயரிட்டு TIST கணக்கெடுப்பாளர்களின் உதவியோடு TIST ல் பதிவு செய்யப்பட்டது. கணக்கெடுப்பாளர்களின் எண்ணிக்கை படி செஞ்சந்தனம் 98 மரங்களும் தேக்கு 320 மரங்கள் கணக்கெடுக்கப்பட்டது. இவர்களின் முறையான பராமரிப்பினால் மரங்கள் துரிதமான வளர்ச்சியில் வளர்ந்து வருகின்றன இதுபற்றி அவர்கள் விடையளிக்கையில் நாங்கள் இந்த நிலப்பகுதியில் மரங்களை நடவுசெய்த உடன் மணிலாவை பயிர் செய்தோம், ஏனெனில் இம்மரக்கன்றுகள் ஒரு நிலையான வளர்ச்சி பெற அரம்பகாலங்களிலேயே அதன் வளர்ச்சியை அதிகபடுத்த நீர்விடுவதில் இருந்து இயற்க்கையான உரம் அளிப்பது வரை சரியாக இருக்க வேண்டும்.



Teak grove of Sri Nataraja Small Group / ஸ்ரீ நடராஜா சிறுகுழுவின் தேக்கு மர தோப்பு

Moreover, short time crops like groundnut do not grow tall and so they do not block the sunlight from falling on the trees and they do not interrupt in the growth of young trees in any manner. The members say that, whatever work they do for the intercrops goes for the trees too and practicing such intercropping system gives them additional revenue too. Our trees are now 1 to 2 meters in height and for the second time we have started intercrops, Brinjal in one side and Groundnut in the other side. Since the trees have grown little height, they will not be interrupted by the Brinjal plants. Since trees are growing well in our land, we have planned to plant few more trees to increase our tree count.

மணிலா மற்றும் மற்ற பயிர்வகை பயிர்கள் அதிக உயரம் இல்லாமல் நடவு செய்த சின்ன மரக்கன்றுகளுக்கு சூரிய ஒளி சரியாக கிடைக்கச் செய்கிறது பின்ப, இம்மரக்கன்றுகளுக்கு வேலி போன்று பாதுகாப்பாகவும் உள்ளது. எங்களுக்கும் ஊடுபயிர்களுக்கு செய்யப்படும் அனைத்த வேலைகளும் இம்மரக்கன்றுகளுக்கும் கிடைக்கிறது. இப்போது கூடுதல் வருமானமும் பெற முடிகிறது. தற்போது எங்கள் செடிகள் ஒரு மீட்டர் உயரத்தில் இருந்து 2 மீட்டர் வரை வளர்ந்துள்ளன. இரண்டாவது முறையாக நாங்கள் கத்திரி ஒரு பகுதியிலும் மணிலா ஒரு பகுதியிலும் பயிர் செய்துள்ளோம். மரங்கள் உயரமானதால் கத்தரிச் செடியினால் பாதிப்பு எதுவும் மரங்களுக்கு ஏற்படாது. மேலும் மரங்கள் நன்கு எங்கள் நிலங்களில் வளர்வதால் இந்த வருடம் கூடுதல் நிலங்களில் மரங்களை நடவு செய்து மரங்களின் எண்ணிக்கையை அதிகபடுத்த உள்ளோம்.



Teak grove of Sri Nataraja Small Group / ஸ்ரீ நடராஜா சிறுகுழுவின் தேக்கு மர தோப்பு

## Ellammal Small Group of Chetpet Center

We the members of Ellammal Small Group of Chetpet Center have planted longstanding trees after joining in TIST and we are maintaining our trees well. Presently, we have planted two different tree species in our grove, they are 67 Red Sandalwood and 300 Teak trees. In between these trees, we are practicing Groundnut as intercropping. In one side of our grove, we have collected cow dung the natural manure. Once this cow dung is prepared well as natural manure, we will use this for our trees and intercropping too. We are getting double revenue in this and moreover, we are not spending any money on chemical fertilizer and that money is a saving for us. As of now, we have very less trees in our group. We have planned to plant more trees in the coming rainy season and we will start to get the TIST voucher very soon.

## சேத்பட் மையத்தை சேர்ந்த எல்லம்மாள் சிறுகுழு

வேளாந்தாங்கள் கிராமம் சேத்பட் மையத்தை சேர்ந்த எல்லம்மாள் சிறுகுழு உறுப்பினர்கள் ஆகிய நாங்கள் TIST திட்டத்தில் இணைந்து நீண்ட கால மரக்கன்றுகள் பயிரிட்டு நல்ல முறையில் பராமரித்து வருகிறோம். தற்போது எங்கள் நிலத்தில் இரண்டு வகையான மரங்கள் பயிரிட்டுள்ளோம். அவை சிவப்பு சந்தனம் 67 மரங்களும் தேக்கு 300 மரங்களும் நடவு செய்துள்ளோம். இவைகளின் நடுவே ஊடுபயிராக மணிலாவை பயிர்செய்து வருகிறோம். மற்றும் எங்கள் நிலத்தின் ஒரு பகுதியில் இயற்கை உரமான மாட்டு சாணம் சேகரிக்கபட்டு அவற்றை நன்கு மட்கவைத்து பின்னர் நாங்கள் செய்யும் பயிர்களுக்கும், மரக்கன்றுக்கும் நல்லதொரு இயற்கை உரத்தினை நாங்களே தயார் செய்து கொள்கின்றோம். மேலும் எங்களுக்கு இரட்டிப்பு வருமானம் கிடைப்பது உடன் இரசயாண உரத்திற்காக செலவிடப்படும் பணம் எங்களுக்கு குறைகிறது. இத்துடன் எங்களது குழுவில் குறைந்த அளவு மரங்களே உள்ளன. இனிவரும் மழைகாலங்களை பயன்படுத்தி அதிக நீண்ட கால மரங்கள் நடவு செய்து TIST திட்டத்தின் மூலம் கிடைக்கும் ஊக்கத் தொகையை பெற ஏற்பாடு செய்து வருகிறோம்.



Member of Ellammal Small Group in their Teak tree grove /
ஏல்லமாள் சிறுகுழுவின் உறுப்பினர் அவர்களது தேக்கு மர தோப்பில்

## Periyapuradaiyaramman Small Group of Chengee Center

On 10.01.2009 two families namely, Selvam and Manikkavel joined together and formed Periyapuradaiyaramman Small Group. The members of this small group have planted 1817 Kumil Trees in their land and are maintaining it in a good manner. After seeing the good growth of these Kumil Trees, two more TIST members of this village have 2500 Kumil Trees in their land. Moreover, the members of this group are watering their trees in great happiness by bringing water in a mud pot from a nearby place. Their Kumil Trees have reached 8 feet in height. After seeing the good growth of their Kumil Trees, Selvam, one of the member of this group says that are planning to plan few more Kumil Trees in one more acre of their land.

## செஞ்சி மையத்தை சார்ந்த பெரியபுரடையார் சிறுகுழு

செஞ்சி மையத்தை சார்ந்த பள்ளிகுளம் கிராமத்தில் 10–01–2009 அன்று TIST – INDIA வில் செல்வம், மானிக்கவேல் ஆகிய இரு குடும்பங்கள் ஒன்று இணைந்து பெரியபுரடையார் எனும் சிறு குழுவாக TIST- ல் இணைந்தனர். இவர்கள் 3 ஏக்கரில் 1817 குமிழ் மரக்கன்றினை நடவு செய்து நல்ல முறையில் பராமரித்து வருகின்றனர். மேலும் இவர்களது குமிழ் மரக்கன்றின் வளர்ச்சியை பார்த்து அந்த கிராமத்தை சார்ந்த மேலும் இரண்டு TIST நபர்கள் 2500 குமிழ்மரக்கன்றினை தற்போது நடவு செய்துள்ளனர். மேலும் இக்குழு உறுப்பினர்கள் ஒவ்வொரு கன்றுக்கும் மண்பானை மூலம் அருகில் இருந்து தண்ணீரை எடுத்து வந்து உறுப்பினர்கள் அணைவரும் மகிழ்ச்சியாக ஊற்றி வருகின்றனர். இவர்களது குமிழ் மரங்கள் தற்போது 8 அடி உயரம் வளர்ந்துள்ளது. குமிழ் மரங்களின் அபரிமித வளர்ச்சியை கண்டுள்ள இக்குழு உறுப்பினர் செல்வம் கூறுகையில் மேலும் 1 ஏக்கரில் குமிழ் மரக்கன்றினை நடவு செய்ய போவதாக கூறினார்.



Member of Periyapuradaiyaramman Small Group in their Kumil tree grove / பெரியபுரடையார் சிறுகுழுவின் உறுப்பினர்கள் அவர்களது குமிழ் மர தோப்பில்

## Sudharshanam Small Group of Kotthankandigai Village

There are two different families in this small group. They have planted two different tree species like Mango and Teak Trees totaling to 437. The members have started Chilly as intercrop in between their Mango and Teak Trees. Since there is no water in their land, the members bring water in pots and water their trees. They have made all preparation to start Groundnut immediately after harvesting Chilly. During coming rainy season, the members have planed to plant few additional Teak Trees. The members of this group are telling about the good activities of TIST to their other villagers and joining them in TIST Program. The newly joined members are planning to plant Mango trees during coming rainy season.

## கொத்தகண்டிகை கிராமத்தை சேர்ந்த சுதர்சனம் சிறுகுழு

இச்சிறுகுழுவில் இரண்டு விவசாய குடும்பங்கள் உள்ளன. இரண்டு குடும்பங்களும் சேர்ந்து 437 மா மற்றும் தேக்கு என இரண்டு வகையான மரங்களை நடவு செய்துள்ளனர் இவைகளின் இடையே ஊடுபயிராக மிளகாய் பயிர் செய்து வருகின்றனர். இக்கன்றுகளுக்கு தண்ணீர் பற்றா காரணத்தினால் தண்ணீர் குடம் கொண்டு ஊற்றிவருகின்றனர் அடுத்து ஊடுபயிர் வேர்கடலை செய்வதற்க்கு நிலத்தை உழுது தயார் நிலையில் வைத்துள்ளனர். இவர்கள் இம்மழை காலத்தில் கூடுதளாக தேக்கு மரங்கள் நடவு செய்ய உள்ளனர். TIST திட்டத்தை பற்றி இவர்களின் அருகாமையில் உள்ள நிலத்தினரிடம் கூறி அவர்களையும் இச்சிறுகுழுவில் இணைத்தனர் இவர்கள் வரும் மழை காலத்தில் மா மரங்கள் நடவு செய்ய முடிவு செய்துள்ளனர்.



Member of Sudharshanam Small Group in their Mango Grove /
சுதர்சனம் சிறுகுழுவின் உறுப்பினர்கள் அவர்களது மா மர தோப்பில்

## Best practices followed by the four groups of this month Chezhumai

- Planting useful longstanding trees
- Using natural manure
- Practicing intercrops in a good manner
- Discussing with other Small Groups and getting good suggestions
- Educating non TIST members about TIST Program and joining them in TIST Program
- Increasing the tree count by planting additional trees every year
- Participate regularly in Node Meetings

## இம்மாத செழுமை இதழ்லில் வரும் நான்கு சிறுகுழுவினரின் சிறந்த பயிற்ச்சி முறைகள்

- நீண்ட கால பயன் உள்ள மரங்களை நடவு செய்வது.
- இயற்கை உரம் பயன்படுத்துவது.
- நல்ல வகையில் ஊடபயிர் செய்வது
- மற்ற சிறுகுழுவிடம் கலந்து ஆலோசனை பெறுவது.
- TIST திட்டத்தில் இல்லாத விவசாயிகளுக்கு TIST திட்டத்தைப் பற்றி எடுத்து கூறி, அவர்களையும் TIST - யில் இணைப்பது.
- ஒவ்வொரு வருடமும் குழுவில் உள்ள மரங்களின் எண்ணிக்கையை அதிகாரிப்பது.
- TIST யின் எல்லா கணுக்கூட்டங்களிலும் தவறாமல் பங்கேற்ப்பது.










## டிஐஎஸ்டி நிகழ்வில் பங்குகொள்ள அங்கத்தினர்கள் பூர்த்தி செய்ய வேண்டிய தகுதிகள்

1. ஒவ்வொரு சிறு குழுவிலும் குறைந்தது மூன்று வெவ்வேறு குடும்பங்களை சார்ந்த 6 முதல் 12 உறுப்பினர்கள் இருக்க வேண்டும்.

2. ஒவ்வொரு சிறு குழுவும் குறைந்தது 1,000 உயிர் மரங்களை, டிஐஎஸ்டியில் சேர்ந்த ஒரு வருடத்திற்குள் வளர்க்க வேண்டும்.

3. டிஐஎஸ்டியில் சேர்ந்து ஐந்து வருடங்களுக்குள் குறைந்தது 5,000 உயிர் மரங்களை கொண்டிருக்க வேண்டும்.

4. உங்கள் சிறு குழு ஒவ்வொரு வருடமும் 20, வருடங்களுக்கு அழிந்த அல்ல விழுந்தபோன மரங்களின் இடத்தில் புதிய மரங்களை வளர்க்க வேண்டும.,

5. எல்லா சிறு குழுவும் கீரீன்ஹவுஸ் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும்.

6. டிஐஎஸ்டி ஒரு வருடத்திற்கு ஒரு உயிர் மரத்திற்கு ரூ.1.50 (US $0.03) கொடுக்கும் (கீரீன் ஹவுஸ் உடன்படிக்கையை படித்து மேலும் விவரங்களை தெரிந்து கொள்ளுங்கள்).

7. புதர்கள் அல்லது 4மீ உயரத்திற்கு குறைவாக வளரும் இனவகை மரங்களை டிஐஎஸ்டி மரமாக கணக்கில் எடுத்து கொள்ளாது.

8. 2மீஇடைவெளிக்கும் குறைவாக பயிரிடப்படும் மரங்கள் கணக்கில் எடுக்க இயலாது.

9. 10 வருடங்கள் அதற்கு மேல் வளர்ந்த மரங்களையே டிஐஎஸ்டி அறுவடை செய்ய அனுமதியளிக்கும். எனினும் ஒரு வருடத்திற்கு 5 சதவிகிதத்திற்கு மேலாக அறுவடை செய்ய கூடாது.

10. ஒவ்வொரு சிறு குழுவும் 33 சதவிகிதத்திற்கும் குறைவாகவே குறுகியகால மரங்கள் இருக்கவேண்டும். (உ.த. தைலமரம்) தற்பொழுதிய குழுக்கள் 33 சதவிகிதத்திற்கு மேல் குறுகியகால சுழற்சி முறை மரங்களை வளர்ப்பின் அவர்கள் 5 வருடம் (2012) வரை கூடுதலான மரங்களை வளர்க்க காலம் கொடுக்கப்படும். அல்லது இந்த தகுதியடையும் வரை மரங்களை அறுவடை செய்ய இயலாது.

11. டிஐஎஸ்டி சிறு குழுக்கள் ஆண்டிற்கு ஒரு முறை கட்டாயமாக ஆய்வாளர்களை அழைத்து தங்கள் தோப்பினை ஆய்வு செய்து கொள்ள வேண்டும். இவர்கள் மற்ற சிறு குழுவினரோடு சேர்ந்து ஆய்வின் பொழுது, ஆய்வாளர்களுக்கு உணவும், தங்கும் இடமும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

12. சிறு குழு அங்கத்தினர் ஒன்றாக கூடி தங்களின் பயிற்சி முறைகளையும். ஆலோசனைகளையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு வாரமும் சந்திக்க இயலாவிட்டால் மாதம் ஒரு முறையாவது சந்திக்க வேண்டும்.

13. சிறு குழு அங்கத்தினர் தாங்கள் மரங்களை வளர்க்கும் நிலத்தின் உரிமை சான்றினை அளிக்க வேண்டும்.

14. குழுவின் அங்கத்தினர்கள் டிஐஎஸ்டி பயிற்சியில் பங்கு கொண்டு மற்ற குழுக்களுடன் தங்களின் சிறப்பு பயிற்சி முறைகளை பகிர்ந்து கொள்ளவேண்டும்.

15. உங்கள் சிறு குழு உள்ள பகுதியில் மற்ற சிறு குழுக்களும் நடந்து செல்லும் தூரத்தில் அமைந்திருக்க வேண்டும். ஒரு வருடத்திற்குள் 100,000 மரங்களும் 5 வருடங்களுக்குள் 300,000 மரங்கள் வளர்க்கும் தகுதியும் கொண்டிருக்க வேண்டும்.